## இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்

## வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை

### மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை –07.06.2017

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 42°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 31°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 23°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 12°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**1. மேற்கு மண்டலம்**

மேற்கு மண்டலப் பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் வரும் நாட்களில் வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கும் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 முதல் 85 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 70 முதல் 75 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 16-18 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ தொடரும் மழையுடன் மணிக்கு 15 கி.மீக்கும் மேல் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதத்திற்கு மேல் வயதுடைய வாழைகளுக்கு ஊன்று கொடுக்கவும். கரும்பில் விட்டம் கட்டவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி குறுவைநெல் நடவு செய்ய வயலினை தயார் செய்யவும். நாற்றாங்காலில் போதிய வடிகால் வசதி ஏற்படுத்தவும்.
- ✓ தென்னை மரத்தோப்பில் கிடைக்கும் மழையினை சேமிக்கும் வகையில் வட்டபாத்தி அமைக்கவும். மேலும் 5 வயதிற்கு மேலுள்ள ஒரு மரத்திற்கு 650 கிராம் யூரியா, 1 கிலோ சூப்பர் பாஸ்பேட், 1 கிலோ பொட்டாஸ் கலந்து உரமிடவும். மேலும் ஒரு மரத்திற்கு நுண்ணுட்ட சத்துகலவை 250 கிராம் அளவில் மண்ணின் மேற்பரப்பில் இடவும்.
- ✓ கம்பு பயிரில் தொடர் மழை மற்றும் காற்றின் ஈரப்பதத்தினால் எர்காட் எனப்படும் தேன் வடிதல் நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. நோய் தாக்குதல் தென்பட்டால் கார்பன்டசிம் மருந்தனை 1 கிராம் 1 லிட்டர் தண்ணீர் என்றளவில் கலந்து தெளிக்கவும். கம்பு பயிரில் மழை மற்றும் காற்றின் ஈரப்பதத்தின் காரணமாக இலைத்துரு நோய் வருவதற்கு வாய்ப்புள்ளது. இதைக் கட்டுப்படுத்த மேங்கோசெப் மருந்தினை 2 கிராம் 1 லிட்டர் தண்ணீரில் என்றளவில் கலந்து தெளிக்கவும்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலையானது 37°செ முதல் 41°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°செமுதல் 31°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 35 முதல் 70 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 7 முதல் 20 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ எதிர்பார்க்கப்படும் மழையைப் பயன்படுத்தி கோடை உழவு செய்து களைகளை கட்டுப்படுத்துவதுடன் மண்ணிலுள்ள பூச்சிகளின் கூண்டுப் புழுக்களை அழிக்கலாம். மேலும் மண்ணில் மழைநீர் உட்புகும் திறனையும் அதிகரிக்கலாம்.
- ✓ நெல் தரிசில் பயிரிடப்பட்ட பருத்தி மற்றும் இறவை உளுந்து பயிரில் அசுவினி, இலைப்பேன், செம்பேன், தத்துப்பூச்சி மற்றும் வெள்ளை ஈ பரவலான தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த

*அசாடிராக்டின் **0.03** சதம் (**3** மி.லி. / லி)ஐ ஒட்டும் திரவத்துடன் கலந்து மழை இல்லாத நாட்களில் காலை அல்லது மாலை நேரங்களில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும்.*

- ✓ குறுவை பருவத்திற்கு ஏற்ற நெல் இரகங்களான ஆடுதுறை 36, ஆடுதுறை 43, ஆடுதுறை 45 மற்றும் ஆடுதுறை 47 விதைகளை விதைக்கவும்.
- ✓ அடர் தீவனத்தில் சோடியம் மற்றும் பொட்டாசியம் போன்ற தாது உப்புகளை கொடுக்க வேண்டும்.
- ✓ கோடைக்காலத்தில் கால்நடைகளுக்கான அக மற்றும் புற ஒட்டுண்ணி நீக்கம் மருந்தை அளிக்க வேண்டும்.

**3. தெற்கு மண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் அதிகமான மேகமூட்டம் மற்றும் மிதமான ஈரப்பதமும் காணப்படும். இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 36°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 26°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேரகாற்றின் ஈரப்பதம் 40 முதல் 85 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 3 முதல் 15 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தென்மேற்கு பருவத்தில் இறவையில் பயிர் செய்ய ஏதுவாக பயிருக்கு தேவையான இடுபொருள்களை (விதைகள், மருந்துகள், தொழுஉரங்கள் மற்றும் உரங்கள்) தயார்நிலையில் வைத்துக்கொள்ளவும்.
- ✓ தற்பொழுது எதிர்பார்க்கப்படும் வானிலையில் காய்பிடிக்கும் பருவத்திலுள்ள பருத்தியில் காய்ப்புழுவின் தாக்குதல் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. தாக்குதல் பொருளாதார சேதநிலையை தாண்டினால் பாசலோன் 35% EC @ 2.5 லிட்டர்/ எக்டர் தெளிக்கவும் அல்லது கார்பரில் 50% WP @ 2.5 கிலோ/ எக்டர் என்ற அளவில் இடவும்.
- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் மிதமான மேகமூட்டம், இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலையில் கொய்யாவில் பழ ஈயின் தாக்குதல் தென்படுவதால் இதனை கட்டுப்படுத்த குயினால்பாஸ் 25 EC அல்லது மாலத்தியான் 50 EC @ 1 மி.லி./ லிட்டர் 15 நாட்களுக்கு 4 முறை வீதம் தெளித்து கட்டுப்படுத்தவும்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 29°செ முதல் 31°செ, மற்ற மாவட்டங்களில் 36°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 20°செ முதல் 21°செ ஆகவும், மற்ற மாவட்டங்களில் 26°செ முதல் 29°செஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 40 முதல் 85 சதவிகிமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 6 முதல் 18 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தற்போது நிலவும் பருவநிலையில் மல்லிகையில் மொக்கு துளைப்பான் தாக்குதல் பரவலாக தென் படுகின்றது. இதனைக் கட்டுப்படுத்த தாக்கப்பட்ட மொக்குகளை புழுக்களுடன் சேகரித்து அழிக்கலாம். மேலும் விளக்குப்பொறி அமைத்து அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம். வேப்பங்கொட்டை வடிநீர் 5 சதம் அல்லது 1 லிட்டர் தணணீரில் 2 மில்லி மாலத்தியான் கலந்து தெளிக்கலாம். செடிகளை சீரான கவாத்து செய்து, தோட்டத்தை சுத்தமாக வைத்து பராமரிக்க வேண்டும்.
- ✓ தற்போது நிலவும் சூழ்நிலையைப் பயன்படுத்தி முருங்கையில் நல்ல விளைச்சல் பெற செடி ஒன்றுக்கு 45 கிராம் தழைச்சத்து 16 கிராம் மணிச்சத்து, 30 கிராம் சாம்பல் சத்து ஆகியவற்றை விதைத்த மூன்றாவது மாதத்தில் இட்டு நீர்பாய்ச்ச வேண்டும். மேலும் ஆறாவது மாதத்தில் தழைச்சத்து மட்டும் ஒரு செடிக்கு 45 கிராம் என்ற அளவில் இட வேண்டும்.
- ✓ தற்போது நிலவும் வானிலையின் காரணமாக கத்தரி பயிரில் பழுப்புத் தத்துப் பூச்சியின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. நோய் தாக்கப்பட்ட செடிகளைப் பிடுங்கி அப்புறப்படுத்த வேண்டும். கத்தரி நடவுக்கு முன்பு 0.2 சதம் கார்போஃபியூரான் 50 STD கரைசலில் நாற்றுகளின் வேர்களை நனைத்து நடவு செய்ய வேண்டும்.

- ✓ தற்போது நிலவும் பருவநிலையில் மிளகாயில் மஞ்சள் சிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த நனையும் கந்தகத்தூள் 6 கிராம் அல்லது எத்தியான் 4 மில்லி ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில் தெளித்தும் கட்டுப்படுத்தலாம்.
- ✓ தற்போது நிலவும் வானிலையின் காரணமாக வாழை பயிரில் கன செதில் பூச்சியின் தாக்கம் தென்படுகிறது. இதனை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த தாக்கப்பட்ட பகுதிகளை சேகரித்து அழித்து விடவும், கைலோகோரஸ் நைக்ரிடஸ், ஸ்கிம்னஸ் காக்கிவோரா என்ற பொறிவண்டுகளை வயல்களில் விடலாம். மேலும் இராசயன முறையில் இதனைக் கட்டுப்படுத்த மோனோகுரோட்டோபாஸ் 0.04 சதவிதம் மருந்தினை தெளிக்கலாம்.

### 4. மலைப்பிரதேச மண்டலம்

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 65 முதல் 85 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 8-12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ நீலகிரி மாவட்டத்தில் தொடர் மழை பெய்து வருவதாலும், வானம் மேகமூட்டமாக இருப்பதாலும் பூஞ்சான நோய் பரவுவதை தடுக்க முற்போக்கு நடவடிக்கையாக தோட்டத்தில் உரிய வடிகால் வசதி செய்ய வேண்டும்.
- ✓ கோஸ் பயிரில் வேர்முடிச்சு நோயை (கென்டை நோய்) தடுக்க, ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனஸ், 10 கிராம் ட்ரைகோடெர்மா மற்றும் 10 கிராம் பெசில்லோமைசிஸ் வீதம் கலந்து விதை நேர்த்தி செய்து நடலாம்.
- ✓ கார்னேசன் பயிரில், இலைப் புள்ளி நோயைக் கட்டுப்படுத்த, புரோபிகோனசோல் 1 மில்லி /லிட்டர் அல்லது ஹெக்சகோனசோல் 1 மில்லி /லிட்டர் இலை வழியாக தெளிக்கலாம்.

### 5. வடமேற்கு மண்டலம்

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் தென்படும். பகல்நேர வெப்பநிலை 39°செ முதல் 40°செ இரவுநேர வெப்பநிலை 26°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 45 முதல் 75 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 3 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தென்மேற்கு பருவ மழையின் தாக்கம் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்களும், வடமேற்கு மண்டலத்தின் மாவட்டமான நாமக்கலிலும் காணப்படும். இதனால் சற்றே பரவலான மழை இருக்க வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பம் 37°செ, ஒட்டியே நிலவினாலும் அது கடந்த மாத அளவைக் காட்டிலும் குறைந்தும், அது நிலவும் நேரம் குறைந்தும் இருக்கும் என்பதால் கோழிகளில் வெப்ப அயற்சி அதிகம் இருக்காது. காற்றின் வேகமும் இனி படிப்படியாக உயரக்கூடும் என்பதால், கோழித் தொழிலுக்கு சாதகமான தட்பவெப்ப நிலையே நிலவும்.
- ✓ தற்போது நிலக்கடலை சாகுபடி செய்யவுள்ள விவசாயிகள் சுண்ணாம்பு மற்றும் கந்தகச்சத்து குறைபாடுள்ள நிலத்திற்கு ஏக்கருக்கு 160கிலோ ஜிப்சத்தை இரண்டு சம பாகங்களாகப் பிரித்து 80 கிலோவை விதைக்கும் போதும், மீதமுள்ள 80 கிலோவை நடவு செய்து 45 நாட்கள் கழித்தும் இடுவது அவசியமாகும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 36°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 27°செ முதல் 31°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 40 முதல் 70 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 5 முதல் 12 கி.மீவேகத்திலும் வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.
- ✓ கோடையில் தீவனத்துடன் தினசரி 3.0 கிராம் அளவில் ஆஸ்பெர்ஜில்லாஸ் ஒரையே என்ற ஈஸ்ட்டை அளித்தால் அது வெப்ப அயற்சியைக் குறைக்கும்.
- ✓ கால்நடைகளுக்கு அளிக்கக்கூடிய வைக்கோல், கேழ்வரகுத் தட்டு, சோளத்தட்டு, கம்பந்தட்டு உலர்ந்த நிலக்கடலை கொடி போன்றவையே 1-2 அங்குல அளவில், சிறுசிறு துண்டுகளாக நறுக்கி அத்துடன் 2 சதம் சாதாரண சமையல் உப்பு கரைசலை கலந்து அளிப்பதன் மூலம் தீவனம் வீணாவதை தடுக்கலாம்.
- ✓ கோழிப்பண்ணைகளில் தீவன தொட்டியை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை உயர்த்தி வைப்பதால் வெப்பத்தாக்கத்தை குறைக்கலாம்.
- ✓ கொட்டகையின் மேற்கூரையின் மீது தென்னங்கீற்று அல்லது வைக்கோல் பரப்பி அதன் மீது தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்பத் தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம்.
- ✓ வெயில் அதிகமான பகல் நேரங்களில் கறவை மாடுகளின் மேல் தண்ணீர் தெளித்து அதன் வெப்பத்தை தனிப்பதன் மூலம் பால் உற்பத்தி குறையாமல் பாதுகாக்கலாம்.
- ✓ கால்நடைககளை வெப்பம் அதிகமாயிருக்கும் மதிய வேளையில் மேய்ச்சலுக்கு அனுப்பாமல் குளிர்ந்த குடிநீர் மற்றும் நிழல் அளிப்பதன் மூலம் வெப்பத்தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம்.
- ✓ நெற் தரிசு உளுந்து மற்றும் பச்சை பயிரில் மேல் சாம்பல் நோயினைக் கட்டுப்படுத்த 5% வேப்பங்கொட்டைச் சாறு கரைசல் அல்லது ஏக்கருக்கு 400 கி மேன்கோசெப் அல்லது 1 கிலோ நனையும் கந்தகத்தூளை காலை அல்லது மாலை வேளையில் தெளிக்கவும்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். பகல்நேர வெப்பநிலை 29°செ முதல் 30°செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 80 முதல் 95 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு 20-22 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் ஐந்து நாட்களில் 50 மி.மீ அளவு மழை பெய்ய வாய்ப்புள்ளது.
- ✓ அதிகமான காற்றுடன் மழை இருப்பதால் இளம் இரப்பர் மற்றும் வாழை மரங்களுக்கு கம்புகளால் முட்டு கொடுக்க வேண்டும்.
- ✓ காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் பயிர்களுக்கு மருந்து தெளிப்பதை தவிர்க்கவும்.
- ✓ ரப்பர் : பாலித்தீன் ரைன் கார்ட்யை மரத்தின் பால் வடியும் பகுதியில் மேல் பொருத்ததவும். இதனால் மழை காலத்தில் பால் வெட்டலாம்.
- ✓ அன்னாசி : மழை நீர் தேங்காமல் இருக்க வடிகால் வசதி செய்ய வேண்டும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம்.கோவை**